# கோவிட்-19/ COVID-19

## வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான புதிய செய்தி

Toronto Community Housing

**ஏப்ரல் 27, 2020**

## வாடகை நெகிழ்ச்சி பற்றிய இன்றைய தகவல்கள்

**COVID-19** காரணமாக வேலை வருமானத்தை இழந்திருப்பின் நீங்கள் வாடகை நெகிழ்சித் திட்டத்திற்குத் தகைமை பெறுகிறீர்கள். வருமானத்தை இழந்திருக்கவில்லையாயின், நீங்கள் தகைமை பெற மாட்டீர்கள் என்பதுடன் உங்கள் முழு வாடகையும் மாதத்தின் முதல் திகதி தொடர்ந்து செலுத்தப்படல் வேண்டும்.

**COVID-19 தபால்:** வாடகை நெகிழ்ச்சித் திட்டம் பற்றிய தகவலுடன் ஏப்ரல் முற்பகுதியில் ஒரு தபால் பொதியை ஒவ்வொரு ரொறொன்ரோ சமூக வீடமைப்பு (TCHC) குடியிருப்புக்கும் நாம் அனுப்பினோம். வாடகை சரிப்படுத்தல் மற்றும் பிற்போடல் படிவங்கள், குடியிருப்புகளின் வருமானம் மற்றும் சொத்து மீள்பார்வைப் படிவம் என்பனவற்றை இது உள்ளடக்கியிருந்தது. இது உங்கள் வருடாந்த குடியிருப்பு வாடகை மீள்பார்வைக்கானது **அல்ல.** இந்தப் பொதி COVID-19 காரணமாக வேலை வருமானத்தை இழந்து வாடகை நிவாரணம் பெற விண்ணப்பிக்க விரும்பும் குடியிருப்பாளர்களுக்குரியது.

**வருமானத்திற்கேற்ற வாடகைக் (RGI) குடியிருப்புகளுக்கான நிவாரணம்:** உங்கள் வருமானத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கமைய உங்கள் வாடகையைக் கணிக்க நாம் உங்களுடன் சேர்ந்து செயற்படுவோம்.

**சந்தை வாடகைக் குடியிருப்புகளுக்கான நிவாரணம்:** உங்களது வாடகையின் ஒரு பகுதியைப் பிற்போடும் தெரிவுகளை நாம் வழங்குகிறோம். குடியிருப்புகள் நீங்கள் உங்கள் வாடகையின் மூன்றிலொரு, அரை அல்லது முக்கால் பகுதியை மூன்று மாதங்கள் வரை கொடுக்கலாம், பின்னர் மிகுதிப் பணத்தை அடுத்த ஆறு முதல் எட்டு மாதங்களில் உங்களது வழக்கமான முழு வாடகையுடன் மேலதிகக் கட்டணமாகச் செலுத்தலாம்.

எல்லாக் குடியிருப்புகளும் வருமான இழப்புக்கான பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும். உங்களிடம் பத்திரங்கள் இல்லாவிடில் உங்களோடு நாம் சேர்ந்து செயற்படுவோம். ஆனால் இதனை பின்னர் ஒரு திகதியில் சமர்ப்பிக்க வேண்டும்.

**மேலதிக தகவல்களுக்கு** அல்லது இப்படிவங்களைப் பெறுவதற்கு, சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்தை **416-981-5500** இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது **torontohousing.ca/covid-19** இணையத்தைப் பாருங்கள்.

இந்த அறிவித்தலை வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் பெறுவதற்கு அழையுங்கள்: **416-981-5500.**